RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1921

OPEN ACCESS

# அறம் வளர்த்த காரிகை ஆதிரை

வி. வசுமதி [அ, *], பி. கவிதா [ஆ]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), உடுமலை-642128, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] நூலகத்துறை, ஸ்ரீ ஜிவிஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), உடுமலை- 642128, தமிழ்நாடு, இந்தியா

# Morality of Karikai Adhirai

V. Vasumathi [a, *], P. Kavitha [b]

[a] Department of Tamil, Sri GVG Visalakshi College for Women (Autonomos), Udumalpet-642128, Tamil Nadu, India

[b] Department of Library and Information Science, Sri GVG Visalakshi College for Women (Autonomos), Udumalpet-642128, Tamil Nadu, India

* Corresponding Author: vasumathiudt@gmail.com

Received: 03-08-2022
Revised: 01-10-2022
Accepted: 12-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Manimekalai has played a very important role in the history of Tamil literature. Manimekalai stands as an example of artistic ability and morality. In this great epic various character emphasize the nature of appetizing food. Adhirai, a character in Manimekalai expresses the best reinforcement for virtue. Manimekalai tried to save the world by providing basic food to all humans. Eradication of hunger is the main task of every king. Manimekalai also want to serve food for the poor. Manimekalai want to serve food using the divine copper vessel and so she searches for Adhirai with the help Kaya Sandigai. Kaya Sandigai is a woman living in the Gandharva world. Due to her demonic hunger, she reaches Chakravala Kotham in search of food. By seeing the pitiful situation of the human, she takes responsibility to feed all the people. Adhirai is the supporter of Manimekalai. It is very important for today's leaders to know who Adhirai is and for what she is special about. Based on that, the article analysis the characteristics of Adhirai who contributed to Manimekalai's virtue from a feminist point of view.

**Keywords:** Karikai Adhirai, Morality, Manimekalai, Character, Food

## முன்னுரை

என்றுபிறந்தவள் என்றுணராத தமிழர் பாரம்பரியம் தொண்டு தொட்டு பல இலக்கியங்களில் இடம்பெறுகிறது. அன்பை, வீரத்தைக், காதலை, உறவுகளை, சமூகத்தை பொருளாராரத்தை என அடுக்கிக்கொண்டே போகலாம். இவ்வகையில் அறஇலக்கியங்கள் தங்களுக்கென்று தனிஇடத்தைப் பெறுகின்றன. சங்ககாலம் முதல் இடைக்காலம் வரை அறக்கருத்துகள் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்தவையாகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றின் அடிப்படையில் நோக்கும்போது நீதி இலக்கிய காலம் தமிழக வரலாற்றில் மிக முக்கியப் பங்காற்றுகிறது. சமயச்சார்பும் நீதிகளைக் கூறுவதில் தங்களது பங்களிப்பைத் தருகிறது. அவ்வகையில் பௌத்த சமயக் காப்பியமான மணிமேகலை காப்பியம் அற இலக்கிய வகையில் மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதனுள் மணிமேகலை என்ற பௌத்த பிக்காக வலம்வரும் இவள் தன் சமயக்கருத்துகளுடன்

அறக்கருத்துகளைச் சமூகத்திற்கு அழுத்தமாகக் கூறிச் செல்கிறாள். பசிப்பிணி அகற்றுதல் நூலின் மிக முக்கிய அறக்கொள்கையாக உள்ளது. இவளது இச்செயலை ஆய்வது இக்கட்டுரையின் சாரம்.

## நோக்கம்

அன்றுமுதல் இன்று வரை மனிதவாழ்வின் அனைத்து நிலைகளிலும் அடிப்படைத்தேவை - உணவு, உடை, இருப்பிடம். அனைத்து உயிரனங்களுக்கும் உணவு அத்தியாவசியமாகிறது. மணிமேகலை காப்பியத்தில் மணிமேகலை உலகமக்களைப் பசிப்பிணியிலிருந்து காக்கமுற்படுகிறாள். அவளுக்கு உறுதுணையாக நிற்கும் கதாபாத்திரம் ஆதிரை. ஆதிரையானவள் அறத்திற்கான முதன்மைத் தன்மை கதாபாத்திரமாகும். அறம் என்ற சொல் தர்மம் என்ற பொருளைத் தந்தாலும் அனைத்து தர்மங்களும் அறம் சார்ந்து நிற்பதில்லை. ஆனால் ஆதிரையின் தர்மம் அறத்துக்குள் செல்கிறது. பசியை நீக்குதல் என்பது ஒவ்வொரு அரசனின் தலையாய பணி. அதனை அரசுதான் செய்ய வேண்டும் என எண்ணாது அந்த ஆயுதத்தை மணிமேகலை தன்கையில் எடுக்கிறாள். அதற்கு உறுதுணையாக நிற்பவள் ஆதிரை. இத்தகு சிறப்புடைய ஆதிரை யார் என்பதும் அவளின் அறச்சிறப்பு பற்றியும் இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. எனவே அறம் வளர்த்த நாயகியாம் ஆதிரை குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

## மணிமேகலை

“அறத்தான் வருவதே இன்பம்”- என்பது வள்ளுவம் (Thiruvalluvar, 2014). அவ்வகையில் இல்லாதவர்களுக்குக் கொடுத்து வாழ்தலில் பெறும் இன்பம் அளவிடற்கரியது. அதனை மனப்பூர்வமாகச் செய்கிறாள் மணிமேகலை. கோவலனும் மாதவியும் தங்களது இல்லறப்பயனால் விளைந்த அமுதம் அவள். கோவலன் கொலையுண்ட பிறகு மாதவி பௌத்த சமயம் சர்ந்து மணிமேகலையையும் பௌத்த பிக்குணியாக வளர்க்க முற்படுகிறாள். அறவணடிகள் வழி பௌத்தம் கண்ட மணிமேகலை தன் தந்தையின் மரணத்தைச் செவியுற்று கலக்கம் கொள்கிறாள். புத்தபகவானுக்குரிய மலர்கள் தன் கண்ணீர் பட்டு நனைய புதுமலர்களைக் கொய்ய சுதமதியுடன் உவவனம் செல்கிறாள். ஆங்கு நின்ற நாட்டின் இளவரசனும் மணிமேகலையைக் காதலிப்பவனுமான உதயகுமரன் இவர்களைத் தொடர்ந்து உவவனம் செல்கிறான். இவன் பின்தொடர்வதை அறிந்த சுதமதி மணிமேகலையை பளிங்கு மண்டபத்திற்குள் அடைக்கிறாள். உதயகுமரன் மணிமேகலை சென்ற வழி அறியாமல் நின்று சென்று விடுகிறான். ஆங்கு மாறுவேடமிட்டு வந்த மணிமேகலா தெய்வம் புத்தபீடிகையை வாழ்த்தி சுதமதியிடம் சக்கரவாளக் கோட்டத்திற்குச் செல்ல பணித்தது. சுதமதிக்கு கந்திற்பாவை மணிமேகலையின் முற்பிறப்பினைக் கூறிட அதனை அறிந்த சுதமதி மறுநாள் மாதவியை அடைந்து நடந்தவற்றைக் கூறினாள்.

மணிபல்லவத் தீவில் இருந்த மணிமேகலைக்கு புத்தபீடிகை தோன்றி தனது முற்பிறப்பை உணர்த்தியும் இனி வருங்காலங்களில் அவள் பவத்திறம் அறுக்கும் நிலை குறித்தும் மணிமேகலா தெய்வம் உணர்த்தியது. உடனாக வானில் பறக்கும் மந்திரத்தையும் உருமாறும் மந்திரத்தையும் அத்தெய்வம் அளித்தது. தீவலதிகையின் வாயிலாக அட்சயபாத்திரம் பற்றி அறிந்து கொண்டு அதனைப் பெறுகிறாள். வானில் பறந்த வண்ணம் தன்தாயைக் கண்டு அறவணடிகளைச் சார்ந்து உலக உயிர்கள் பசித்துன்பம் நீங்கும் வழிவகைக்குத் தயாரானாள்.

பாத்திரத்துடன் பெருந்தெருவிற்குச் சென்ற அவளைப் பசித்துன்பம் மிகுந்த மக்கள் சூழ்ந்தனர். கற்புடைமாந்தர் இடும் முதல் ஐயத்தை ஏற்ப நிற்க காயசண்டிகை வழி ஆதிரையின் திறன் அறிகிறாள். அவளிடம் பெற்ற முதல் பிச்சையால் அட்சயபாத்திரம் நிறைந்தது. காயசண்டிகை மணிமேகலையிடம் உணவு உண்டு தன் பேய்ப்பசி சாபம் நீங்கப் பெற்று தன் உண்மை உருவம் பெற்று விண்ணுலகம் செல்லும் போது சக்கரவாளக் கோட்டம் செல்ல மணிமேகலையைப் பணிக்கிறாள். சக்ரவாளக் கோட்டத்தில் உலகவறவிக்குச் சென்று பசிப்பிணி நீக்கும் காலை சித்ராபதி (மாதவியின்தாய்) உதயகுமரனுக்குத் தகவல் கொடுக்கிறாள்.

உதயகுமரன் வரவை அறிந்த மணிமேகலை காயசண்டிகையின் உருவில் அன்னமிடுகிறாள். உதயகுமரனுக்கு ஆங்கிருந்த சம்பாபதியும் கற்சிலைகளும் மணிமேகலையை மறந்திட கூறுகின்றன. ஆனால் சூளுரைத்து அங்கேயே கிடந்த உதயகுமரனிடமிருந்து தப்பித்து சிறைக்கோட்டம் சென்றாள் மணிமேகலை. காயசண்டியின் உருவத்தில் பசிப்பிணி தீர்க்கும் செய்தி அறிந்த அரசன் அவளின் வேண்டுதலின்படி சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கினான். இதுபோன்ற நிகழ்வுகளைச் செவியுற்ற உதயகுமரன் உலகவறவிக்குச் செல்ல காஞ்சனன் (காயசண்டியின் கணவன்) தன் காயசண்டியின் உருவில் இருக்கும் மணிமேகலையையும் அவளைப் பின்தொடரும் உதயகுமரனின் செயலும் கண்டு மூவரும் சம்பாபதி கோவிலை அடைந்தனர். தன் மனைவியை அடையத் துடிக்கும் உதயகுமரனைக் கொலை செய்கிறான் காஞ்சனன். கந்திற்பாவையின் வழி உண்மைகள் அறியப் பெற்ற மணிமேகலை மறைந்து நின்றாள். காஞ்சனன் தன்நகரத்திற்குச் சென்றான். ஆங்கிருந்த முனிவர்கள் வாயிலாக தன் மகன் இறந்ததைச் செவியுற்ற அரசன் நடந்தவற்றை அறிந்தான். மணிமேலையின் மீது கோபமுற்ற அரசி அவளைப் பல்வேறு சித்ரவதைக்கு ஆளாக்கினாள். அதனின்று மீண்ட மணிமேகலை அரசிக்கு உலகநீதியை உணர்த்தி பவத்திறம் அறுத்தாள் மணிமேகலை. இத்தகு சிறப்புடைய மணிமேகலை தனது முதற்பணியால் பெருமை கொள்வது ஆதிரையால் எனவே ஆதிரையின் அறம் நிலை நிறுத்தப்படுகிறது.

## அட்சய பாத்திர வரலாறு

மணிபல்லவ தீவிற்குச் சென்ற மணிமேகலை தீவதிலகை வழி அட்சயபாத்திரம் கிடைக்கும் வழியை அடைகிறாள். அவள்

"போதித் தலைவனுடன் பொருந்தித் தோன்றும்

ஆபுத்திரன் கையமுத சுரபிஎனும்

மாபெரும்பாத்திரம்"

என்று அறிமுகப் படுத்துகிறாள் (Chithalai Chathanar, 1969). இதன் வரலாற்றை அறவணடிகளிடம் கேட்டுத் தெளிவு பெற அறிவுரையும் சொல்கிறாள். ஆபுத்திரனின் கையில் இருந்தது இப்பாத்திரம். ஆபுத்திரன் என்பான் பசுவினால் பாலூட்டப்பட்டு வளர்க்கப்பட்டவன். அவனை புதினி என்பான் வளர்க்கலாயினான். அவ்வூரில் துன்புறும் ஒருபசுவினைக் காப்பாற்றினான். இதனை மக்கள் தவறாகக் கூறி ஆபுத்திரனின் இழிந்த பிறப்பு குறித்து நகைக்கலாயினர். வளர்த்தவனும் கைவிட தென்மதுரையை அடைந்தான். வரும்வழியில்

"காணார் கேளார்கால் முடப் பட்டோர்

பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்

யாவரும் வருக என்றிசைத்து டனூட்டி"

என எஞ்சியதை உண்டு காலம் கழித்தான் (Chithalai Chathanar, 1969). அத்தகு ஒருநாளில் சிலமக்கள் தங்களுக்கு உணவு வேண்டி நின்றனர். ஆங்கு சித்தாதேவி வெளிப்பட்டு

"ஏடா அழியல் எழுந்திது கொள்ளாய்

நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது

வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது

தான்தொலை வில்லாத் தகைமையது"

என்று கூறி அட்சயபாத்திரத்தைக் கொடுத்தது (Chithalai Chathanar, 1969). அதனைப் பெற்ற மகிழ்ச்சியில் ஆபுத்திரன் அனைத்து மக்களுக்கும் உணவளித்து மகிழ்ந்தான். இதனை அறிந்த இந்திரன் மாறுவேடம் பூண்டு ஆபுத்திரனுடன் உரையாடுகையில் அட்சயபாத்திரத்தின் திறத்தால் மக்களின் பசிப்பிணியைப் போக்கும் தன்மையைச் சற்று ஆணவத்துடன் கூறிவிட்டான். அதனான் சினமுற்ற

இந்திரன் உலகிற்கு நன்மழை பெய்வித்து உலக உயிர்களைப் பசிப்பிணியினின்று காத்தான். பாத்திரத்தின் தேவை இல்லாமல் போனதால் மனம் வருந்தி நின்றான் ஆபுத்திரன். அச்சமயம் சாவகநாட்டில் பசிப்பிணியுடன் மக்கள் இருப்பதை வழிப்போக்கர்களின் வழி அறிந்து ஆங்கு பயணித்தான். வழியில் மணிபல்லவத்தீவில் இறங்கி இவன்நிற்க...... இவனைத் தற்செயலாக விடுத்துக் கப்பல் கிளம்பியது. யாரும் இல்லாத ஊரில் யாருக்காக உணவளிப்பது என்று வருந்தி கோமுகிப் பொய்கையில் அட்சயபாத்திரத்தினை இட்டான். இடும்போது 'அருளறம் பூண்டு உயிர்களைப் பாதுகாப்போர் யாரேனும் வரின் அவர்கையிற் புகுக 'என்று கூறிய ஆபுத்திரன் பட்டினி கிடந்து உயிர்துறந்தனன். இத்தகு மேன்மையுடையது அட்சயபாத்திரம். ஆபுத்திரன் கூறிய வழி அருளறம் பூண்ட மணிமேகலை கையில் இப்பாத்திரம் கிடைத்தது. ஆபுத்தரனின் மனம் விரும்பும் தருணமும் நிறைவேறியது.

## ஆதிரை

அறவணடிகள் வழிபாத்திர பெருமையை அறிந்த மணிமேகலை அப்பாத்திரம் கொண்டு மக்கள் பயனுற வேண்டும் என்ற அறவணடிகளது எண்ணத்தை நிறைவேற்றத் துணிந்தனள். பிக்குணி கோலம் பூண்டு பாத்திரமேந்திய பெருந்தகை பெருநகர் அடைந்தனள். பசியுற்ற மக்கள் இவளிடம் அமுதம் பெறச் சூழ்ந்த போது மணிமேகலை

"பத்தினிப் பெண்டீர் பண்புடன் இடூஉம்

பிச்சையேற்றல் பெருந்தகை வுடைத்து" (Chithalai Chathanar, 1969)

என்று கூறிட ஆங்கு பேய்ப்பசியுடன் நின்ற காயசண்டிகை

"குளனணி தாமரைக் கொழுமலர் நாப்பண்

ஒருதனி யோங்கிய திருமலர் போன்று

வான்தரு கற்பின் மனையுறை மகளிரில்

தான்தனி யோங்கிய தகைமையள் அன்றோ

ஆதிரை நல்லாள்"

என ஆதிரையை அறிமுகம் செய்த வைக்கிறாள் (Chithalai Chathanar, 1969). மேலும் அவளது மனையைக் காட்டி இதில் புகுவாய் எனவும் கூறிச் செல்கிறாள்.

மணிமேகலைக்கு காயசண்டிகை வழி அறிமுகமாகும் ஆதிரை ஒருவணிகக் குலப்பெண் ஆவாள். அவளின் கணவன் சாதுவன் என்பான். தனது தீயஒழுக்கத்தால் கணிகையர் பெண்ணைச் சார்ந்து தனது கைப்பொருளை எல்லாம் இழந்தனன். அதுமட்டுமின்றி வட்டாடலும் சூதாடலும் பழகிட அதனுள் ஆழ்ந்து பணம் முழுமையும் இழந்தான். (ஆதிரை அனைத்தும் அறிந்தும் பண்பு மாறாமல் நிற்பது ஈண்டு நோக்கத்தக்கது.) தன் தவற்றை உணர்ந்து பொருள் சேர்க்க வணிகர்கள் கூட்டத்துடன் கப்பலேறி சென்றான். வழியில் ஏற்பட்ட கடல் சீற்றத்தால் கப்பல் கவிழ இவன் நாகர்மலைப் பகுதிக்குத் தப்பினர். இதனை அறியாது உடன்வந்தவர்கள் சாதுவன் இறந்தான் என்று அறிவித்தனர். இதனைச் செவியுற்ற ஆதிரை சுடலைக் காட்டில் தீயிட்டு

"மிக்கஎன் கயவன் வினைப்பயன் உய்ப்பப்

புக்குழிப் புகுவேன்" (Chithalai Chathanar, 1969)

என்று புக,

"படுத்துடன் வைத்த பாயற் பள்ளியும்

உடுத்த கூறையும் ஒள்ளெரி யுறாஅது

ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலில்

சூடிய மாலையும் தொன்னிறம் வழாது

விரை மலர்த்தாமரை ஒருதனி யிருந்த

திருவின் செய்யோள் போன்று”

இனிதாக நின்றாள் (Chithalai Chathanar, 1969). ‘தீயும் கொல்லாத தீவினை யாட்டியா யினேன்’ என்று ஏங்கிய ஆதிரையின்பால் வானகக்குரல் ஒலித்தது. சாவகன் நாகர்மலையில் இருப்பதாகவும் சந்திரதத்தனுடன் இணைந்து விரைவில் ஆதிரையை அடைவான் என்றும் கூறியது. அது கேட்ட நாள் முதல் ஆதிரை

“புண்ணிய முட்டாள் பொழிமழை தரூஉம்

அரும்பெறல் மரபிற் பத்தினிப் பெண்டிரும்

விரும்பும்”

வகையில் அறம் பல செய்து வாழலாயினாள். அனைவரும் புகழும் பத்தினிப் பெண்ணாக ஆதிரை மதிக்கப் பெற்றாள் (Chithalai Chathanar, 1969).

நாகர்மலையில் கிடந்த சாதுவனை அம்மலை வாழ்மக்கள் இவன் தங்களுக்கு நல்ல உணவாகும் என்றெண்ணி அவனைத் துயிலெழுப்பினர். நாகர்களது மொழியைப் பயின்ற சாதுவனைக் கண்டு மகிழ்ந்த அவர்கள் தம் குருமகனிடம் அழைத்துச் சென்றனர். சாதுவனுக்கு மதுவும் மாதுவும் கொடுக்க அவற்றின் தீமைகளைக் கூறினன். அதுமட்டுமின்றி

“பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்

உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்

நல்லறஞ் செய்வோ நல்லுல கடைதலும்

அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்

உண்டு”

என உயிரின் மறுபிறப்பு மற்றும் இருவினை குறித்தும் போதித்தான். மகிழ்ந்த மக்கள் அவனைக் கொண்டாடினர் (Chithalai Chathanar, 1969). அதன்பின் அங்கு வந்த சந்திரதத்தனுடன் இணைந்து ஆதிரையிடம் வந்து சேர்ந்தான். இதனை

“இந்நகர் புகுந்தீங்கி வளொடு வாழ்ந்து

தன்மனை நன்பல தானமும் செய்தனன்”

இவ்வரிகள் மெய்ப்பிக்கின்றன. இவ்வாறு ஆதிரையின் வாழ்வு காணலாகிறது (Chithalai Chathanar, 1969).

## கோட்பாடு

கோட்பாடு என்பது ஆழ்ந்த ஆராய்ச்சியின் கீழ் அறிவு சார்ந்து பிறப்பது. அது அச்சிந்தனைகளின் பேறுகளைக் குறிக்கும். நிகழ்வுகளை நிரூபிக்கப்பட்டதும் படாததும் நிலையில் நிற்பது. ஓர் இலக்கியத்தினை அதனின் காலம் உட்பட ஆய்வாளர்களின் பார்வையில் பல்வேறு கோட்பாடுகளை வைத்து ஆராய இடம்உண்டு. ஈண்டு மனித அறங்களைக் கொண்டு அமையும் அறநெறி அணுகுமுறை கொண்டு ஆராயப்பட உள்ளது. ‘சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் அச்சமூகம் கட்டிக் காத்து வரும் அறக்கருத்துகளையும் வெளிப்படுத்துவதாக அமையும்’ என்ற விளக்கத்தைக் காணமுடியும் (Gnanasambandan, 1988). இவ்வணுகுமுறை ஆதிரையின் அறத்தின் வழி உறுதியாகக் காண வகையுண்டு.

## ஆதிரை மணிமேகலை சந்திப்பு

காயசண்டிகை வழி ஆதிரையை அறியப் பெற்ற மணிமேகலை அவளை

"ஆதிரை நல்லாள் அவள்மனை இம்மனை

நீபுகல் வேண்டும் நேரிழை"

என்று இல்லத்திற்கே அழைத்து வருகிறாள் (Chithalai Chathanar, 1969). வந்த மணிமேகலை

"ஆங்ஙனம் ஆகிய ஆதிரை கையால்

பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென

மனையகம் புகுந்து மணிமேகலை தான்

புனையா ஓவியம் போல நிற்றலும்"

அவளைக் கண்ட ஆதிரை -மணிமேகலையைத் தொழுது வணங்கி வலம் வந்து இன்சொற்களோடு அமுதசுரபி நிறையும் வண்ணம் மருந்தாகிய அன்னத்தை இட்டாள். பிச்சை பெற்றது முதல் மணிமேகலை தனது பயணத்தைத் தொடர்கிறாள் (Chithalai Chathanar, 1969).

## பெண்ணியக் கோட்பாடு

பெண்களுக்காக பெண்களே அமைத்துக் கொண்ட அமைப்பு பெண்ணியம். பெண்களுக்குரிய அகம் மற்றும் புறம் சார்ந்த பிரச்சனைகளுக்குப் பெண்களே தீர்வு காணும் நிலையே பெண்ணியம். இப்பெண்ணிய அமைப்பு மணிமேகலையில் பெண்பாத்திரங்களின் வழி வெளிப்படுகிறது.

பௌத்ததுறவி மணிமேகலை பெண்ணிய பாத்திரத்தின் முதல் நிலை. அவளது வாழ்க்கைப் பயணம் ஆரம்பமாவது சுதமதியால். அடுத்தநிலை தொடங்குவது காயசண்டிகையால். பசிப்பிணி தீர்க்க அவளுக்கு உறுதுணையாக நிற்பது ஆதிரைநல்லாள். அவள் பௌத்த பிக்காக மாற்றுவது இராசமாதேவியை. இவ்வாறு பெண்ணிய மாந்தர்கள் வழி மணிமேகலை காப்பியம் பெண்ணியக் கோட்பாடுகளைக் கொண்டு விளங்குகிறது.

பெண்ணியக் கூறுகளைக் கூறும் போது திருமணம் என்ற பந்தம் பெண்ணியச் சிதைவு ஏற்படும் காரணியாகவே பல இடங்களில் சுட்டப் படுகிறது. "திருமணம் என்பதே பெண்டீரைப் பாழ்படுத்த வந்த படுகுழி. அது அறவே தேவையில்லை. அந்தக் கட்டு மற்றும் பந்தம் எல்லாம் அடிமை நிலையே. அவற்றையெல்லாம் உடைத்து எறிந்து விட்டு வானம்பாடி போல சுதந்திரவானில் பெண்மை சிறகடித்துப் பறந்திட வேண்டும்" என்று குறிப்பிடுகிறார் (Simon, 2009). இக்கருத்து மணிமேகலைக்குப் பொருந்துகிறது.

முன்ஜென்மக் கதைகளை மணிமேகலை யார்யார்வாய்க் கேட்பினும் மெய்பொருள் கண்டு தனது அறப்பணிக்கே முக்கியத்துவம் கொடுக்கிறாள். பசியாற்றுகிறாள். நேரடியாக பசியுறும் மக்களைச் சந்தித்து உணவளிக்கிறாள். பல்சமயத்தாருடன் வாதம் செய்து பௌத்தசமயத்தை நிலைநிறுத்துகிறாள். ஒரு பெண்ணிண் சுதந்திரமாகச் சிந்திக்கும் திறன் முடிவெடுத்ததைப் பாராட்டும் சமூக அமைப்பு இது போன்ற காரணிகளே மணிமேகலைக்கு சமூக அங்கீகாரம் கிடைக்க ஏதுவாக அமைந்தது. எனவே பெண்ணிய கோட்பாடுகள் பொருந்துவது ஈண்டு நோக்கத்திற்குரியது.

## ஆதிரையின் அறக்கோட்பாடு

ஆதிரை தன்கணவர் செய்யும் அனைத்து செயல்களிலிலும் பொறுமை காத்து சிறந்த மகளிருக்குரிய தன்மையில் நிற்கிறாள். இதில் அறக்கோட்பாட்டின் தன்மை மிளிர்கிறது. தன்கணவர் மறித்தார் என்ற சேதி கேட்ட நாள் முதல் அன்றே தீக்குளிக்க இறங்கினாள் ஆதிரை. அசாரீ உள்ளதைக்

கூறிட கற்புக்கரசி நிலைக்கு உயர்கிறாள் ஆதிரை. மணிமேகலை தன் வாயிலுக்கு வந்து நிற்றலும் அதனைக் கண்டவுடன் மருந்தான அமுதத்தை வழங்கினாள். இருவரும் இதற்கு முன்பு யாங்கனும் சந்தித்தது இல்லை. ஒருவர் பற்றிய அறிமுகமும் இல்லை. எனினும் ஆதிரை அமுதசுரபியில் பிச்சையிட்டது ஆதிரையின் அறமாகும். சமுதாய மதிப்பே அறம் என்புழி அதனுள் இணைந்து நிற்கிறாள் ஆதிரை.

"அறம்செயவிரும்பு"

என்ற ஆத்திச்சூடியை நினைவுக்கூறல் வேண்டும் (Avvaiyar, 1996).

"மனிதாபிமான உணர்வும் பிறர்க்கு கேடறா நடத்தையும் சமுதாய நல்லுணர்வோடு தனிப்பட்ட மனிதனின் மனநலனும் கூடி வருகின்ற அறங்களே அறநெறி" (ஞானசம்பந்தன்., 1988) என்ற கருத்து ஆதிரைக்குப் பொருந்துகிறது. இவளது அறம் உலகியலுக்கு உயிர் தந்து விடுகிறது. மணிமேகலைக்கு பௌத்த பிக்காக வலம் வர உடன் நிற்கிறது. அறக் கோட்பாட்டின் தன்மையே ஆதிரை என்பது நிரூபிக்கப்படுகிறது.

## முடிவுரை

மணிமேகலையைக் கண்டவுடன் அன்னமிட்ட ஆதிரையின் செயல் அறநெறி அணுகுமுறையில் திளைக்கிறது. அறம் என்பது மற்றவருக்குக் கொடுக்கும் கண்ணோட்டம் கொண்டது. அவ்வகையில் அறநெறிக் கோட்பாட்டில் ஆதிரையின் செயல்பாடு அடங்குகிறது. இதுகாறும் கூறிய கருத்துகளின் அடிப்படையில் மணிமேகலையின் அறம் வளர்க்க ஆதிரையின் அறம் துணைநின்ற விதத்தை இக்கட்டுரை விளக்கியது. பெண்ணியச் சார்புடன் விளங்கிய மணிமேகலை மற்றும் பெண்ணிய நிலையில் நின்று அறம் வளர்த்த ஆதிரை. இவ்விருவரின் செயல்கள் பெண்ணியக் கோட்பாடு அறக்கோட்பாடு வழி ஆராயப்பட்டது. அறம் வளர்த்த காரிகையாக ஆதிரை மிளிர்கிறாள்.

## References

Avvaiyar, (1996) Aathichudi, Tamil University, Thanjavur, India.

Chithalai Chathanar, (1994) Manimegalai, Saiva Siddhanta Works Publishing Society, Tirunelveli, India.

Gnanasambandan, A.S. (1988) Ilakkiyakalai, Saiva Siddhanta Works Publishing Society, Tirunelveli, India.

Simon, T. (2009) Tamil Ilakkiya Varalaru, Paari Nilaiyam, Chennai, India.

Thiruvalluvar, (2014) Thirukkural, Paari Nilaiyam, Chennai, India.

Vimalandham, S. (2009) Ilakkiya Thiranaaivuviyal, Paari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License